1981 ஆகஸ்ட் 29] [திரு. ஆர். எம். வீரப்பன்]

இங்கே உண்ணாவிரதம் இருந்த காரணத்தாலே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உச்சி கவுடர் போன்றவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த மற்ற தலைவர்களும் இங்கே கொடுமைகள் நடக்கிறது, தவறுகள் நடக்கிறது என்று சொன்ன காரணத்தாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த காரணங்களை கண்டறிய வேண்டும என்பதற்காக தற்காலிகமாக நிறுத்தியிருக்கிறோம். மாவட்ட ஆட்சியாளர் அவர்களுக்கு தகவல் தந்திருக்கிறோம். அவரும் நிறுத்தியிருக்கிறார். அங்கே அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற வந்திருக்கிற தகவல் சரியான தகவலாக இருக்காது. ஒருவேளை அரசியல் அடிப்படையில் இந்த கருத்தை தெரிவிக்கிறவர்களாக இருக்கலாம். ஆக்கிரமிப்புகள் அகற்றுவது மேற்கொள்ளப்படவில்லை, இதில் விசாரணை முடிவடைந்த பிறகு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.30]

(ஆ) கரூரில் நெசவாளர்களின் உண்ணாவிரதம் குறித்து.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, ''கரூரில் நெசவாளர்கள் கூலிப்பிரச்சனை பற்றி உண்ணாவிரதம் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கரூரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் சுமார் 20,000 கைத்தறி நெசவாளர்கள், கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். 1-3-1981 முதல் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் ஊதிய விகிதங்கள் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவந்துள்ளது. 10-8-1981 முதல் கரூரிலுள்ள சுமார் 25 கைத்தறி நெசவுத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கப்பட்ட ஊதிய விகிதங்களைத் தொழிலதிபர்கள் குறைத்துள்ளார்கள் எனவும் தெரியவந்துள்ளது. இந்த நிறுவனங்களில் உள்ள சுமார் 450 தொழிலாளர்கள், 1-3-1981-ல் இருந்து கொடுத்து வந்த ஊதிய விகிதங்களைத் தரவேண்டும் எனக்கோரி 11-8-1981 முதல் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இத்தொழிலாளர்கள், 19-8-1981 முதல் உண்ணாவிரதமும் மேற்கொண்டனர். வருவாய்த்துறை மற்றும் காவல் துறை அதிகாரிகளின் முன்னிலையில் கரூரில் இதைப்பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்தன. அதன் விளைவாக, இந்த 25 நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு 10-8-1981 தேதிக்கு முன்னர் கொடுக்கப்பட்டு வந்த ஊதிய விகிதங்களை மீண்டும் கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த சுமூக முடிவின் பலனாக 24-8-1981 முதற் தொழிலாளர்களால் வேலை நிறுத்தம் மற்றும் உண்ணாவிரதமும் கைவிடப்பட்டு இப்பொழுது சகஜ நிலைமை நிலவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.